# JONAH

# யோனாவின் புஸ்தகம்

BRITISH AND FOREIGN BIBLE SOCIETY

MADRAS AUXILIARY

1914

*2 Pies* உ பை

# JONAH

# யோனாவின் புஸ்தகம்

BRITISH AND FOREIGN BIBLE SOCIETY

MADRAS AUXILIARY

1914

Demy 12 mo]

[Small Pica

40,000 COPIES

# யோனா

## 1 அதிகாரம்

1 அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்த
2 ருடைய வார்த்தை உண்டாகி, அவர்:—நீ எழுந்து மகா
நகரமாகிய நினிவேக்குப்போய், அதற்கு விரோத
மாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என்
3 சமுகத்தில் வந்து எட்டினது என்றார்.—அப்பொழுது
யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீ
சுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப்
போய், தர்ஷீசுக்குப்போகிற ஒரு கப்பலைக் கண்டு,
கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று
விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக்
கப்பல் ஏறினான்.

4 கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வர
விட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று
நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று.—
5 அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்
தன் தேவனை நோக்கி வேண்டுதல்செய்து, பாரத்தை
லேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்
திரத்தில் எறிந்துவிட்டார்கள்; யோனாவோவென்
றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்
துக்கொண்டு, அயர்ந்த நித்திரைபண்ணினான்.

6 அப்பொழுது மாலுமி அவனிடத்தில் வந்து: நீ
நித்திரைபண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன்
தேவனை நோக்கி வேண்டிக்கொள்; நாம் அழிந்துபோ
காதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளு
வார் என்றான்.

7 அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்குநேரிட்ட

தென்று நாம் அறியும்படிக்குச் சீட்டுப்போடுவோம்
வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்
கொண்டு சீட்டுப்போட்டார்கள்; யோனுவின் பேருக்
குச் சீட்டு விழுந்தது.

8 அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: யார் நிமித்
தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்க
ளுக்குச் சொல்லவேண்டும்; உன் தொழிலென்ன? நீ
எங்கேயிருந்து வருகிறுய்? உன்தேசம் எது? நீ
9 என்ன ஜாதியான் என்று கேட்டார்கள்.—அதற்கு
அவன்: நான் எபிரெயன்; சமுத்திரத்தையும் பூமியை
யும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனுகிய கர்த்
10 தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றுன்.—அவன்
கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போகிற
வன் என்று தங்களுக்கு அறிவித்ததினுல், அந்த மனு
ஷர் மிகவும் பயந்து, அவனை நோக்கி: நீ ஏன் இதைச்
செய்தாய் என்றுர்கள்.

11 பின்னும் சமுத்திரம் அதிகமாய்க் கொந்தளித்துக்
கொண்டிருந்தபடியால், அவர்கள் அவனை நோக்கி:
சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன
12 செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.— அதற்கு
அவன் நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே
போட்டுவிடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்க
ளுக்கு அமர்ந்திருக்கும்; என்னிமித்தம் இந்தப்பெரிய
கொந்தளிப்பு உங்கள் மேல் வந்ததென்பதை நான்
அறிவேன் என்றுன்.

13 அந்த மனுஷர் கரைசேரும்படி வேகமாய் தண்டுவலித்
தார்கள்; ஆனுலும் சமுத்திரம் வெகு மும்முரமாய்க்
கொந்தளித்துக்கொண்டே யிருந்தபடியால் அவர்க
14 ளால் கூடாமற்போயிற்று.—அப்பொழுது அவர்கள்
கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டு: ஆ கர்த்தாவே, இந்த
மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துப்

போடாதேயும்; குற்றமில்லாத இரத்தப்பழியை எங்
கள்மேல் சுமத்தாதேயும்; தேவரீர் கர்த்தர்; உமக்குச்
சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர் என்று சொல்லி,—
15 யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்
டார்கள்; சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்
16 தது.—அப்பொழுது அந்த மனுஷர் கர்த்தருக்கு மிக
வும் பயந்து, கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனை
களைப் பண்ணினார்கள்.

17 யோனாவை விழுங்கும்படி ஒரு பெரியமீனைக் கர்த்தர்
ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே
யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்.

## 2 அதிகாரம்

1 அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவ
னாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி:
2 என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்
டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான்
பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர்
3 என் சத்தத்தைக் கேட்டீர்.—சமுத்திரத்தின் நடுமைய
மாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர்;
நீரோட்டம் என்னைச் சூழ்ந்துகொண்டது; உம்மு
டைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல்
4 புரண்டது.—நான் உமது கண்களுக்கு எதிரே இராத
படிக்குத் தள்ளப்பட்டேன்; ஆகிலும் இன்னமும் உம்
முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்
5 றேன்.—தண்ணீர்கள் பிராணபரியந்தம் என்னை நெருக்
கினது; ஆழி என்னைச் சூழ்ந்தது; கடற்பாசி என்
6 தலையைச் சுற்றிக்கொண்டது.—பர்வதங்களின் அடி
வாரங்கள் பரியந்தமும் இறங்கினேன்; பூமியின்
தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைக்
கிறதாயிருந்தது; ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே,
7 நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர்.—என்

ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை
நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது
பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்
8 தது.—பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிற
வர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்
9 கிறார்கள்.—நானோவெனில் துதியின் சத்தத்தோடே
உமக்குப் பலியிடுவேன; நான் பண்ணின பொருத்தனை
யைச் செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது
என்றான்.

10 கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனா
வைக் கரையிலே கக்கிவிட்டது.

## 3 அதிகாரம்

1 இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனா
2 வுக்கு உண்டாகி, அவர்:—நீ எழுந்து மகா நகரமா
கிய நினிவேக்குப்போய், நான் உனக்குக் கற்பிக்கும்
வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்
3 றார்.—யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்
படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்றுநாள்
பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்
4 தது.—யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள்
பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு,
அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று
கூறினான்.

5 அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை
விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்;
பெரியோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்
6 கொண்டார்கள்.—இந்தச் செய்தி நினிவேயின் ராஜா
வுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை
விட்டு எழுந்து, தான் உடுத்திருந்த உடுப்பைக்
கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்
7 பலிலே உட்கார்ந்தான்.—மேலும் ராஜா, தானும் தன்

பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக,
நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடு
களும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயா
8 மலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும்,—மனுஷ
ரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு,
தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும்,
அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம்
கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்
9 கடவர்கள்.—யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோ
காதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு தம்
முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும்
திரும்புவார் என்று கூறச்சொன்னான்.

10 அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்
பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியை
களைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று
சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு,
அதைச் செய்யாதிருந்தார்.

## 4 அதிகாரம்

1 **யோனா**வுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது;
2 அவன் கடுங்கோபங்கொண்டு,—**கர்த்தரை** நோக்கி
விண்ணப்பம்பண்ணி: ஆ **கர்த்தாவே**, நான் என்
தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச்சொல்ல
வில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீ
சுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்க
மும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும்,
தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று
3 அறிவேன்,—இப்போதும் **கர்த்தாவே**, என் பிராணனை
என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோ
டிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்
4 என்றான்.—அதற்குக் **கர்த்தர்**: நீ எரிச்சலாயிருக்கிறது
நல்லதோ என்றார்.

5 பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்
துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசை
யைப்போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத்
தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்
6 திருந்தான்.—யோனாவுடைய தலையின் மேல் நிழலுண்
டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு
நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச்
செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்
மேல் ஓங்கிவளரப் பண்ணினார்; அந்த ஆமணக்கின்
7 மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான்.—மறுநா
ளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு
பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச் செடி
யை அரித்துப்போட்டது; அதினால் அது காய்ந்து
8 போயிற்று.—சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ண
மான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது
வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன்
சோர்ந்து போய், தனக்குள்ளே சாவைவிரும்பி: நான்
உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமா
9 யிருக்கும் என்றான்.—அப்பொழுது தேவன் யோனாவை
நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது
நல்லதோ என்றார்; அதற்கு அவன்: நான் மரணபரி
யந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லது தான் என்
றான்.

10 அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்
காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்
திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப்
11 பரிதபிக்கிறாயே.— வலதுகைக்கும் இடதுகைக்கும்
வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்
பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்
களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான்
பரிதபியாமலிருப்பேனோ என்றார்.

American Advent Misson Press, Velacheri, St. Thomas' Mount—1914.

# கவனிப்பு

தேவன் அருளிய சத்திய வேதத்தில் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்கிற இரண்டு ஆகமங்கள் அடங்கியிருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் ௩௯ புஸ்தகங்களும் புதிய ஏற்பாட்டில் ௨௭ புஸ்தகங்களும் உண்டு.

வேதம் முழுவதையும் ௰௨ அணுவுக்கும், புதிய ஏற்பாட்டை ௪ அணுவுக்கும், வேதத்தில் கீழ்ச்சொல்லிய தனித்தனி பங்குகளை சொற்பக் கிரயத்துக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

## பழைய ஏற்பாட்டுப் பங்குகள்

| | அ. பை. |
|---|---|
| ஆதியாகமம் ... ... ... ... ... | ௯ |
| யாத்திராகமம் ... ... ... ... | ௯ |
| ரூத்து ... ... ... ... ... | ௩ |
| எஸ்தர் ... ... ... ... ... | ௪ |

## பழைய ஏற்பாட்டுப் பங்குகள்

| | அ. பை. |
|---|---|
| யோபு ... ... ... ... ... | ௬ |
| சங்கீதம் ... ... ... ... ... | ௯ |
| நீதிமொழிகள் ... ... ... ... | ௬ |
| ஏசாயா ... ... ... ... ... | ௯ |
| தானியேல் ... ... ... ... ... | ௬ |
| யோனா ... ... ... ... ... | ௨ |

## புதிய ஏற்பாட்டுப் பங்குகள்

| | அ. | பை. |
|---|---|---|
| மத்தேயு சுவிசேஷம் ... ... ... | | ௩ |
| மாற்கு சுவிசேஷம் ... ... ... ... | | ௩ |
| லூக்கா சுவிசேஷம் ... ... ... ... | | ௩ |
| யோவான் சுவிசேஷம் ... ... ... | | ௩ |
| நான்கு சுவிசேஷங்கள் ... ... ... | க, | ௬ |
| அப்போஸ்தலருடைய நடபடிகள் ... ... | | ௩ |
| ரோமர், கலாத்தியர் ... ... ... | | ௩ |
| யாக்கோபு, யோவான் ... ... ... | | ௩ |